**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

# நம்முடைய நடார் ஸ்ரீராஜம் பட்டாச்சாரியார் ஸ்வாமி

(ஸ்ரீவைகானஸ உபன்யாஸ சக்ரவர்த்தி, ஸ்ரீஅனந்தராம தீக்ஷிதரின் ப்ரியசிஷ்யர், ப்ரவசனரத்ன ஸார்வபௌமர், சொல்ன் செல்வர், அபினவவ்யாஸர் சேங்காபுரம் ஸ்ரீ.உ.வே.எஸ்.பி.கல்யாணராம பட்டாச்சாரியார்)

ஸ்ரீமான் நடார் ஸ்ரீராஜம் பட்டாச்சாரியார் ஸ்வாமி நடார் கிராமத்திலேயே இருந்து கொண்டு வேதாத்யயனம் செய்தார். பிறகு ஸ்ரீவைகானஸ க்ருஹ்யம், பகவத் சாஸ்த்ரத்தை நாச்சியார்கோவில் ஸ்ரீ.உ.வே.கிருஷ்ணபட்டாச்சாரியாரிடம் அப்யாசம் செய்தார். நாச்சியார்கோவில் ஸ்ரீ.உ.வே.கிருஷ்ணபட்டாச்சாரியார் ஸ்வாமி ந்யாயம், வ்யாகரணம், பூர்வ மீமாம்ஸை. உத்தரமீமாம்ஸை, பகவத்சாஸ்த்ரம் போன்றவைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். இவர் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு நமக்கு (ஸ்ரீவைகானஸர்களுக்கு) தப்தசக்ரமுத்ரை கிடையாது என்பதை ந்யாய ஸ்தலங்களில் விவாதம் செய்துள்ளார். ஸ்ரீமான் லக்ஷ்மணசூரி **Judge** (ந்யாயாதிபதியாக) இருந்தபோது நமக்கு தப்தமுத்ரை கிடையாது என தீர்ப்பாயிற்று. இந்த விஷயத்தை ஸ்ரீமான் லக்ஷ்மணசூரி அவர்களின் குமாரர் டி.எல். வெங்கட்ராமய்யர் சுப்ரீம்கோர்ட் **Judge** இருந்தபோது அவரே என்னிடம் கூறியிருக்கிறார். நாச்சியார்கோவில் ஸ்வாமியின் ப்ரயாஸையும் ஸ்ரீவைகானஸர்களுக்குச் செய்த தொண்டையும் நாம் என்றும் மறக்கமுடியாது.

நடார் ஸ்வாமி எப்பொழுதும் தன்னடக்கமுள்ளவர். நித்யகர்மானுஷ்டாத்தை தவறாது ஸகாலத்தில் செய்பவர். காலை ஸந்த்யாவந்தனம் (உதயத்திற்கு முன்பும்) பிறகு ஔபாஸனம், ப்ரம்மயக்ஞம், நித்யாராதனம் (ஆலயத்திலும் க்ருஹத்திலும்) செய்வதும் வைச்வதேவம், மாலை ஔபாஸனம் போன்றவற்றை விடாமல் தனது வாழ்நாள் முழுவதும் செய்தவர். நடார் கிராமத்தில் இருந்து பிறகு உப்பியப்பன் கோவில் பஞ்சமூர்த்தி ஆரதனத்தை ஸமூர்த்தார்ச்சனபகவத்யஜன விதிப்படிச் செய்து வந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நமது ஸ்ரீவைகானஸர்களின் கர்மானுஷ்டானத்தையும் வைதிகமான காரியங்கள் வேறு சூத்ரத்தைக் கொண்டு நடத்தும் நிலை ஆங்காங்கு காணப்பட்டது. அது சமயம் சேங்காபுரம் ஸ்ரீ.உ.வே. பாலக்ருஷ்ண பட்டாச்சாரியார், பாகவதபுரம் ஸ்ரீ.உ.வே. நாராயண பட்டாச்சாரியார் ஆகியோரைக் கலந்து ஸ்ரீவைகானஸத்தில் ச்ராத்தப்ரயோகம், அபரப்ரயோகம், பூர்வப்ரயோகம், விவாஹப்ரயோகம் போன்ற புஸ்தகங்களை வெளியிடத் துவங்கினார். பொருள், புகழ் எதையும் எதிர்பார்க்காமல் ஸ்ரீவைகானஸர்கள் தனது சூத்ரப்படி ஸம்ஸ்காரங்களைச் செய்து கொள்ளவேண்டும் என்பதே தனது முக்கிய விருப்பமாக நினைத்து செயல்பட்டார். அவருடைய இந்த முயற்சி பலனளிக்க வேண்டும் என்று சொல்க்கொண்டிருந்தார். என்னிடத்தில் ஒரு முறை சேங்காபுரம் ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரிடம் ச்ராத்தப்ரயோகத்திற்கு மதிப்புரை எழுதி வாங்கித்தரும்படிச் சொன்னார். நானும் இவரைப் பற்றிச் சொல் மதிப்புரையை வாங்கியளித்தேன். அந்த மதிப்புரை இன்றும் அவர் வெளியிட்ட ச்ராத்தப்ரயோகத்தில் உள்ளது.

நடார் ஸ்வாமி மிக எளிய சுபாவம் உள்ளவர், வயதில் சிறுவரானாலும் வேத சாஸ்த்ரம் படித்தவர்களிடத்தில் மிக்க மரியாதையுடன் பேசுவார். யாராவது அவரை நமஸ்காரம் செய்தால் (தனக்கு தகுதி இல்லை என்று) பயப்படுவதை அடியேன் நேரில் பலதடவை கண்டிருக்கிறேன். ஸ்ரீவைகானஸ விஜயத்தில் முதல் பக்கத்தில் துளசி வாடியிருந்தாலும் வைகானஸர்கள் பொருள் கல்வியில் குறைவாக இருந்தாலும் வணங்கத்தக்கவர்கள் என்று ஸ்ரீமுத்துபட்டர் குறிப்பிட்டபடி அனுஷ்டானத்தில்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009**
**Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

சிறப்பாக நடந்துவந்தவர். இப்படிப்பட்ட நடார் மஹானின் 100வது ஜயந்தி மஹோத்ஸவத்தை தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் கொண்டாட வேண்டும். இது போன்று ஒவ்வொரு வித்யார்த்தியும் தனது குருவின் ஜயந்தி விழாவைச் சிறப்பாக நடத்தி ஆரோக்யம், ஆயுள், ஐச்வர்யம், க்ஷேமம் முதயவற்றை அடையவேண்டும் என ப்ரார்த்திக்கிறேன்.

நடார் ஸ்வாமியின் சதமான ஜயந்தி மஹோத்ஸவத்தில் ஸமர்ப்பித்த

## அபிநந்தபத்ரம்

1, கோபாலபட்டஸ்ய ப்ரியாலமேலோ: தநூபவம் ராஜமிதி ப்ரஸித்தம்.
ஸ்ரீஸ்ரீநிவாஸாபிதமத்ரி கோத்ரம் வைகானஸம் தம் மனஸா ஸ்மராமி..

2. கோபாலபட்டார்ய சுதேன யேன ஸ்மார்த்த ப்ரயோக: கிலமுத்ரிதச்ச.
அதீத வேதம் க்ருதபாகயக்ஞம் வைகானஸம் தம் மனஸா ஸ்மராமி..

3. ப்ராதாசயஸ்ய க்ருத ஸோமயக்ஞ: ச்ரௌதோsக்னிஹோத்ரீ வரதாக்ய யஜ்வா.
தர்மத்வயம் பாதமேவ தேன வைகானஸம் தம் மனஸா ஸ்மராமி..

4. அத்ரே: முனே: குல ஏவ ஜாத: ஆசார்யவர்ய: விகனஸ்ஸமோ ய:
பத்னீ ச ஸாத்வீ சுதவச்ச சிஷ்ய: வைகானஸம் தம் மனஸா ஸ்மராமி..

5. ஸ்ரீஸ்ரீநிவாஸாபித பட்டவர்ய: ஸம்ப்ரார்த்தயன் ஸ்ரீதன தான்யவ்ருத்திம்.
ஆஸ்தேsதுனா ஸ்ரீஹரிஸன்னிதௌ ய: வைகானஸம் தம் மனஸா ஸ்மராமி..

இத்தம்
எஸ்.பி.கல்யாணராமபட்டாசாரியார்

---

## நமது குலதனம்

(திருமால் கவிச்செல்வர், ஸ்ரீவைணவ கைங்கர்ய ஸ்ரீமான் மதுராந்தகம் எஸ்.ரகுவீரபட்டாச்சாரியார்)

இவரைப்போலவே எவருண்டு
இனியவர் தனியவர் கனியவரே
கோபாலபட்டரின் குலதனமே
கொண்டாடும் நடாரின் பலமிவரே
வைகானஸ மரபிலே வான்மீகி
வையகம் கொண்டாடும் வரகவியே
ஒப்பியப்பன் ஸன்னிதியில் ஒப்பிலாத
உயர்தனியாஸ்தான ப்ருஹஸ்பதியாய்
ஒப்பிலாதவப்பனுக்கு உடன் தொண்டு
கல்விக் கடலானவர் கல்வி வளர்த்தார்
கையடக்கமாகவே நூல்கள் பலவே
பூர்வப்ரயோகத்துடன் விவாஹமுறை
ஆஷாட உபாகர்மா அபரமதே
உள்ளம் உரைசெயலெனும் மூன்றதனால்
உயர் வைகானஸமதை உயர்த்தினாரே
பி.வி.கே, அம்மங்குடி, அல்லூர், மல்லபுரம்
பிரியமான சீடர்களே பெருமை பெற்றார்
இனியவர் தனியவர் கனியவரே
இன்றுமொரு நூற்றாண்டு இருந்தருள்க.